# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள மான்ஹேம் மாநாட்டுத் திடலில்
## 25.06.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜெர்மனி ஆண்டு மாநாடு எனது குத்பாவுடன் ஆரம்பமாகிறது. அல்லாஹ் எல்லா வகையிலும் இந்த ஜல்ஸாவை அருளுக்குரியதாக்குவானாக! இந்த மாநாடு எல்லா வளங்களுடன் நமது ஈமானுக்கு புத்துயிரூட்டுவதாக அமையட்டுமாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்தற்காக இந்த ஜல்ஸாவை உருவாக்கினார்களோ அதனை எப்போதும் நினைவில் கண்டு செயல்படுங்கள். பைஅத்தின் தத்துவத்தை உணர்ந்து ஈமான் மற்றும் நிச்சய உறுதியில் முன்னேறுவது அந்த நோக்கமாகும்.

அல்லாஹ், அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் மீது காட்டும் அன்பு உலகிலுள்ள அனைத்து அன்பையும் விட மேலோங்கி விடுவது, நன்மையில் முன்னேறி வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பது, ஆன்மீக சொற்பொழிவுகளைக் கேட்டு அறிவு மற்றும் ஞானத்தில் முன்னேறுவது, ஒருவருக்கொருவர் அன்பு, நேசம், சகோதரத்துவத்தின் தொடர்பை நிலைநாட்டுவது, பிறகு அந்த உறவுகளை வளர்த்துக் கொண்டே செல்வது, நடப்பு வருடத்தில் தமது பைஅத் உறுதிமொழிகளை நிறைவேற்றி விட்டு நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்ற நமது சகோதரர்களுக்காக துஆ செய்வது ஆகியவை இந்த ஜல்ஸாவின் நோக்கமாகும்.

இந்த மூன்று நாட்களில் இந்த நோக்கங்களை கவனத்தில் வையுங்கள். அப்போது தான் இந்த ஜல்ஸா நடத்தப்படுவதன் இலக்குகளை அடைய முடியும். அத்துடன் நான் இன்னொற்றையும் கூறுவேன். இந்த இலக்குகளை அடைவதற்காக நீங்கள் இந்த மூன்று நாட்களில் சிறப்பாக முயற்சி செய்யுங்கள். உங்கள் நிலைகளை மாற்றுவதற்கு துஆவும் செய்யுங்கள். தமக்காக துஆ செய்கின்ற அதே வேளையில் ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி நபரும் உலகில் எந்தப் பகுதியில் வசிப்பவராயினும் அல்லாஹ் அவரை தனது சிறப்பான பாதுகாப்பில் வைப்பானாக என்றும் துஆ செய்யுங்கள். குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள்.

இன்று பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு நெருக்கடிக்கு மேல் நெருக்கடி கொடுக்க முயற்சி செய்யப்படுகிறது. எதிரிகளுக்கு சர்வசுதந்திரதம் வழங்கப்படுகிறது. அல்லாஹ் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்கு உறுதியான பாதத்தை வழங்குவானாக! அவர்களின் ஈமானை உறுதியாக்குவானாக! ஒவ்வொரு தீமையிலிருந்தும் காப்பாற்றுவானாக! அவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொண்டவாறு அசாதாரண அடையாளங்களைக் காட்டுவானாக! இன்றைய குத்பாவின் கருத்துக்கு வருவதற்கு முன் ஜல்ஸா ஸாலானாவின் ஏற்பாடுகள் சம்பந்தமாக சிறிது கூற விரும்புகிறேன்.

ஜல்ஸாவின் ஏற்பாடுகளைச் செய்வதற்காக பல்வேறு துறைகள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு துறையைச் சேர்ந்த ஒவ்வொரு அலுவலர் மற்றும் தொண்டவர்கள் அனைவரும் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு துறைகளுடன் சம்பந்தப்பட்ட பலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக தம்மை ஒப்படைக்கின்றனர். மேலும் அல்லாஹ்வுக்காக மட்டும் சுயநலமின்றி தொண்டு செய்து வருகின்றனர். அவர்களுள் ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், வயோதிகர்களும், குழந்தைகளும் அடங்குவர். அவர்களுள் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் அருளால் தமது கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்கள் இந்த தொண்டர்களுடன் முழுமையாக ஒத்துழைப்பு தாருங்கள். சில விதிமுறைகள் ஜல்ஸாவிற்காக ஏற்பாது செய்பவர்களால் வகுக்கப்பட்டுள்ளன. ஜல்ஸாவை மிகச் சிறந்த

முறையில் நடத்துவதற்காகவே இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏதாவது தொண்டர் விருந்தாளிகளிடம் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி கவனமூட்டினால் உடனே அதனை செயல்படுத்த விருந்தினர்கள் முயற்சி செய்ய வேண்டும்; கோபப்படக் கூடாது. தொண்டர்களிடம் நான் முன்னரே கூறி விட்டேன். இனிய சுபாவத்துடன் விருந்தினர்களிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன். இன்னொரு முக்கியமானதொரு விஷயத்தை விருந்தினர்களிடம் கூற விரும்புகிறேன். தமது சுற்றுப்புறத்தை எப்போதும் நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் இருந்தும் கூட விஷமிகள் ஏதேனும் தீங்கிழைக்கலாம். இக்காலத்தில் ஜமாஅத்திற்கு நஷ்டம் விளைவிக்க குறைந்தபட்சம் ஜமாஅத்தில் ஒரு நிம்மதியின்மையை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. எல்லா பாதுகாப்புகளையும் அவர்கள் ஏமாற்றி விட வாய்ப்பு இருக்கிறது. எனவே பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுங்கள். பத்து முறை உங்களை பரிசோதனைக்கு உட்படுத்தினாலும் உங்களை பரிசோதனை செய்வதற்கு அர்ப்பணித்து விடுங்கள். அந்த பரிசோதனை உங்களை சந்தேகப்பட்டு அவ்வாறு செய்வதில்லை. மாறாக உங்களை பாதுகாப்பதற்காக செய்யப்படுகிறது. எனவே இதனை கவுரக்குறைவு என்று கருதி அதனை பிரச்சனையாக்கி விட வேண்டாம். ஏதாவது ஒரு விருந்தாளி வந்தால் அவர் ஜல்ஸா ஏற்பாட்டாளர்களிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்பவர்களைக் கடந்து தான் அவர் உள்ளே வருவதை அனுமதிக்க வேண்டும். அல்லாஹ் உங்கள் எல்லாரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! ஜல்ஸாவிலிருந்து அதிகமான பயனடைய முயற்சி செய்யுங்கள்.

இப்போது நான் கூறவிருந்த கருத்தின் பக்கம் வருகிறேன். இன்றைய குத்பாவும் தமது இன்னுயிரைக் கொடுத்து நமது சிந்தனைக்கு புதிய வழிகாட்டிய ஷஹீதுகளைப் பற்றி நற்குறிப்புகளைத் தாங்கியதாகவே இருக்கும்.

ஷஹீதுகளின் பட்டியலில் இப்போது என்னிடம் முதலில் இருப்பது **முகர்ரம் கலீல் அஹ்மத் சாஹிப் சலங்கி ஷஹீது.** இவர் முகர்ரம் நஸீர் அஹ்மத் சலங்கியின் மகன் ஆவார். நான் ஷஹீதுகளைப் பட்டியலிடுவது ஒரு குறிப்பான எந்த வரிசைப்படியும் அல்ல. எனக்குத் தரப்பட்டுள்ள பட்டியலை நான் அப்படியே உங்கள் முன் வைத்து வருகிறேன். எனவே இதில் எந்தவிதமான தர வரிசையும் கிடையாது. இந்த கலீல் அஹ்மத் சாஹிப் சலங்கியின் மூதாதையர் காதியானுக்கு அருகிலுள்ள காரா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவரது தந்தைவழிப் பாட்டனார் மாஸ்டர் முஹம்மத் பக்ஷ் சிலங்கி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்.

முகர்ரம் அப்துல் காதிர் ஸவுதாகர்மல் சாஹிப் இவரது உறவினராவார். நாடு பிரிவினைக்குப் பிறகு இவர்கள் குஜ்ரான்வாலா வந்தனர். ஷஹீது லாஹூர் அரசுக் கல்லூரியில் Electrical Engineer படித்து விட்டு ஐந்து ஆண்டுகள் வாப்டாவில் பணியாற்றினார். பிறகு தமது தந்தையுடன் சேர்ந்து தொழில் செய்தார். தந்தையார் மரணித்த பிறகு சொந்தமாக தொழில் செய்தார். 1997 -ல் லாஹூர் வந்தார். ஒரு வருடத்திற்கு முன்பு வரை அமெரிக்காவிற்கு ஜவுளி இறக்குமதி செய்யும் தொழில் செய்து வந்தார். அமெரிக்காவில் வாழ்ந்து வந்தார். அதற்கு முன்பும் கணிசமான காலம் பாகிஸ்தானில் தொழில் செய்து வந்தார். பாகிஸ்தானில் நாஸிம் அத்ஃபால் ஆக பணியாற்றியுள்ளார். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயிதாகவும் இருந்தார். மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் லாஹூர் பகுதி, தொழில், உற்பத்தி பிரிவின் சதர் ஆகவும் இருந்தார். லாஹூர் மாவட்ட ஜெனரல் செகரட்டரி போன்ற பொறுப்புகளை வகித்தவர். ஷஹாதத்தின் போது இவரது 51. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. ஷஹீது ஒரு மாதம் முன்பு தான் அமெரிக்காவிலிருந்து தமது பணி நிமித்தம் பாகிஸ்தான் வந்திருந்தார். ஜுமுஆ தொழுவதற்காக மஸ்ஜித் தாருஸ் ஸிக்ர் போயிருந்தார். தாக்குதல் நடந்த போது வெளி வளாகத்தில் மாடிப்படிக்குக் கீழ் மற்ற அன்பர்களுடன் ஒரு மணி நேரம் வரை இருந்தார். அவர் விரும்பியிருந்தால் கீழ்தளத்திற்குப் போயிருக்கலாம். மாடிப்படிக்கு கீழ் காயமுற்ற ஒரு சகோதரரைப் பார்த்து அவரை கீழே இழுப்பதற்கு முயற்சி செய்த போது ஒரு தீவிரவாதியின் துப்பாக்கிக்கு இலக்காகி விட்டார். வலது மார்பில் குண்டு பாய்ந்தது. ரொம்ப நேரம் மாடிப்படிக்குக் கீழ் காயமுற்ற நிலையில் இருந்தார். அல்லாஹ்வு இவரது ஷஹாதத் விருப்பமாக இருந்தது. எனவே இவர் மஸ்ஜிதிலேயே ஷஹாதத்தின் பதவியைப் பெற்றார். தாருஸ் ஸிக்ரில் இவர் மீது

தாக்குதல் ஏற்பட்ட போது, இவர் தனது மூத்த மகன் ஷுஐப் சிலங்கிக்குப் போன் செய்து தாக்குதல் நடக்கிறது. அல்லாஹ் எல்லாரையும் பாதுகாக்க துஆ செய். வீட்டினரையும் துஆ செய்யுமாறு கூறு என்று கூறினார். மிக நல்ல மனிதர். பொருள் தியாகத்தில் முன்னணியில் நிற்பவர். சிறு வயதிலேயே பெரும் பொறுப்புகளை வகிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஜமாஅத் சேவையில் நல்ல உணர்வு மிக்கவராக இருந்தார். ஒவ்வொரு பொருளாதார திட்டங்களிலும் தீவிரமாக பங்கேற்பார். பொருள் தியாகத்தில் எப்போதும் முன்னணியில் இருப்பவர். குஜ்ரான்வாலா பகுதியில் பகவான்பூர் என்ற ஊரில் ஒரு பள்ளிவாசல், தாருஸ் ஸிக்ர், ரப்வாவின் Reception போன்றவற்றிற்கு பெரும் செலவு செய்தார். நல்ல மனிதரும் உழைப்பாளியும் ஆவார். தமது குழந்தைகளுக்கு எப்போதும் கவனமூட்டி வருவார். ஒவ்வொரு பணியைத் தொடங்கு முன்பும் காலத்தின் கலீஃபாவிடம் அனுமதியும் வழிகாட்டலும் பெறுவார். கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் ஈடிணையற்றவர். இவரது வியாபாரம் பாகிஸ்தானில் இருந்தது. சில சூழ்நிலையின் காரணமாக இவரை அமெரிக்கா செல்லுமாறு நான் கூறியிருந்தேன். லாஹூரிலிருந்து உடனே அமெரிக்கா சென்று விட்டார். பல அஹ்மதிகளுக்கு தொழில்ரீதியான வேலை வாய்ப்பு உதவிகளைச் செய்துள்ளார். இவரது இல்லற வாழ்விலும் நல்ல முன்னுதாரணமாக விளங்கியதாக மனைவி கூறுகின்றார்.

முன்மாதிரியான தந்தையாகவும், கணவராகவும் இருந்தார். குழந்தைகளை எல்லா விதத்திலும் நன்றாக கவனித்துக் கொள்பவராக இருந்தார். தேவை என்று வாசலுக்கு எவராவது வந்தால் வெறுங்கையுடன் அவரை திருப்பி அனுப்பமாட்டார். மக்கள் தமது பிரச்சனைகளின் தீர்வுக்காக இவரிடம் வருவர். அவர்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை வழங்குவார். எனவே மர்கஸி போர்டின் உறுப்பினர் ஆக்கப்பட்டார். நல்ல சிரித்த முகத்துடன் இருப்பார். இளகிய மனம் உள்ளவர். கடினமான பணியை ஒப்படைத்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார். இன்ஷா அல்லாஹ் செய்து விடுவோம் என்று கூறுவார். அல்லாஹ் இவருக்கு திறமையை வழங்கியிருந்தான். அதனை நல்ல முறையில் பயன்படுத்தவும் செய்தார். பிறரிடம் வேலை வாங்குவதிலும் நல்ல திறமையுடையவர் ஆவார். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை தான் செய்ய வேண்டும் என்பதில்லை. உதாரணமாக வக்ஃபே ஜதீத் செயலர் சந்தாவை வசூலிப்பதற்காக என்னுடன் வாருங்கள் என்று அழைத்தால் அது அவரது வேலை இல்லை என்றாலும் அவருடன் சென்று விடுவார்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலின் திட்டத்தை முன் வைத்த போது உடனே தனது வாக்குறுதியை Fax மூலம் அனுப்பி வைத்தார்; அதனை நிறைவேற்றவும் செய்தார். உமூரே ஆமா செயலர் சவுத்ரி முனவ்வர் அலி சாஹிப் கூறுகிறார்: காதியான் ஜல்ஸா ஸாலானாவின் போது இவருக்கு போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. மிகச் சிறந்த முறையில் அதனை செய்தார். நாள் முழுவதும் வேலை செய்தாலும் சிரித்த முகத்துடன் இருப்பார். அமெரிக்கா போன பிறகு 2009 ஜல்ஸாவுக்கு வந்தார். பாகிஸ்தானுக்கும் சென்று தமது பணிகளை முடித்தார். ரப்பாவில் இருந்து ஜல்ஸாவுக்காக காதியான் வருபவர்களுக்கு உதவி செய்வார்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்பாளராக இருந்த போது எனக்கு இவருடன் தொடர்பு இருந்தது. தலைமையகத்துடன் நல்ல ஒத்துழைப்பும் கட்டுப்படுதலின் முன்மாதிரியும் கொண்டவராக விளங்கினார். எப்போது அழைத்தாலும் என்ன சூழ்நிலை என்றாலும் தமது பணியை பொருட்படுத்தாமல் வந்து விடுவார். பொதுவாக வியாபாரம் செய்பவர்கள் பணியை விடமாட்டார்கள். இப்போது கூட என்னை இலண்டனுக்கு வந்து சந்தித்து விட்டு சென்றார். நிலைமைகளைக் கருத்தில் கொண்டு எச்சரிக்கையாக இருக்குமாறு கூறினேன். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அவருக்கு ஷஹாதத்தை நிர்ணயித்து இருந்தான். பழைய பெரியவர்கள், சான்றோர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தவர்களின் சந்ததிகள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் கவனம் இல்லாமல் இருக்கிறார்கள் என்ற வருத்தம் அவருக்கு இருந்தது. என்னை சந்திக்கும் போது அதனை வெளிப்படுத்தி விட்டு சென்றார். இன்னும் சில விஷயங்களைப் பற்றி நானே அவரிடம் கேட்ட பிறகு கருத்து தெரிவித்தார். நல்ல கருத்துக்களை வழங்கக் கூடியவர்.

குஜ்ரான்வாலாவின் முன்னாள் அமீர் எழுதுகிறார்: கிலாஃபத்திற்கு எதிராக எந்த நட்பும் உறவும் பொருட்டல்ல என்று எப்போதும் இந்த ஷஹீது கூறுபவராக இருந்தார். 1974-ல் சிலங்கியின் குடும்பத்தைச்

சார்ந்த சிலர் பலவீனத்தைக் காட்டியபோது இவர் மிகவும் சிறுவயதாக இருந்த போதிலும் அதே நிலையில் அவர்களை விட்டு விட்டு ஜமாஅத்தின் அமீராகிய சவுத்ரி அப்துர் ரஹ்மான் சாஹிபுடைய வீட்டிற்கு சென்று விட்டார். அங்கு ஜமாஅத்தினர் பலர் தஞ்சம் புகுந்து இருந்தனர். அவர்களுக்கு தொண்டு செய்யத் தொடங்கினார். இவரது தியாகத்தைப் பற்றி சவுத்ரி சாஹிபும் நல்ல தாக்கத்தை பெற்றிருந்தார். நான் ஏற்கனவே கூறியது போன்று பொருள் தியாகம் செய்யும் வாய்ப்பும் பெற்றிருந்தார்.

முன்னாள் அமீர் சாஹிப் எழுதுகிறார்: திறந்த மனதுடன் தியாகம் செய்பவர். ஒரு முறை ஒரு பிளாட் வாங்குவதற்காக முயற்சி செய்து வந்தோம்; கிடைக்கவில்லை. அதன் விலை 50 இலட்சமாக இருந்தது. இதனை நான் தந்து விடுகிறேன் என்றார். ஆனாலும் அது கிடைக்கவில்ல. அதற்குப் பதிலாக 44 இலட்சத்தில் ஒரு கட்டடம் வந்தது. அதனை இவர்தான் வழங்கினார். அது ஜமாஅத்தின் விருந்தினர் இல்லமாக இப்போது இருக்கிறது. மஸ்ஜிதுக்காக முதலிலும் கணிசமான ரொக்கம் வழங்கியிருந்தார். எனவே கொஞ்ச காலம் முன்பு பெரும் தொகை தந்துள்ளேன் என்று இப்போது கூறவில்லை. கிலாஃபத் நூற்றாண்டின் போது லாஹுர் சார்பாக காதியானில் ஒரு விருந்தினர் இல்லம் உருவாக்குவதற்கு இவர் தம் சார்பாக 10 இலட்சம் வழங்கியிருந்தார். ரப்வாவில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் விருந்தினர் இல்லம் உள்ளது. அதன் மறுசீரமைப்பிற்காக பெரும் தொகை தந்தார். சுருக்கமாக, நேரத்தை அர்ப்பணிப்பதிலும் முன்னணியில் நிற்பவராக இருந்தார். கட்டுப்படுதல், ஒத்துழைப்பை வழங்கக் கூடியவர். ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தவர்கள்; ஜமாஅத் தொண்டர்களுக்கு கண்ணியம் வழங்கக்கூடியவர்கள். பணத்தை பெரிதாக நினைக்க மாட்டார். எவ்வளவுக்கெவ்வளவு இவரிடம் செல்வம் அதிகரித்ததோ அவ்வளவுக்கவ்வளவு இவரிடம் பணிவையே நான் பார்த்துள்ளேன்.

அடுத்த **ஷஹீது சவுத்ரி இஜாஸ் நஸ்ருல்லாஹ் கான் சாஹிப்.** இவர் சவுத்ரி அசதுல்லாஹ் கான் சாஹிபின் மகன் ஆவார். இவர் ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்களின் அண்ணன் மகன் ஆவார். மார்டன் டவுண் பைத்துந்நூரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. ஜமாஅத் பணிகளை செய்வதற்கு நல்ல வாய்ப்பு இவருக்கு கிடைத்து வந்தது. நான்கு கலீஃபாக்களுக்கும் தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். இவரது தந்தையர் சவுத்ரி அசதுல்லாஹ் கான் சாஹிப் லாஹுர் மாவட்ட முன்னாள் அமீர் ஆக இருந்தார். ஆரம்ப கல்வியை காதியானில் பயின்றார். லாஹுரில் மெட்ரிக்கும், Graduation -ம் பயின்றார். லண்டனில் சட்டக்கல்வி படித்தார். சில காலம் இலண்டனில் செய்முறைப் பயிற்சி செய்தார். பிறகு தந்தையார் நோயுற்றதால் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய வழிகாட்டலுக்கிணங்க இஸ்லாமாபாத்தில் குடிபெயர்ந்தார். 1984 -ல் ஓய்வு பெற்றார். பிறகு உலகியல் பணி எதுவும் செய்யவில்லை. மாறாக ஜமாஅத் பணிகள் மட்டும் தான் செய்து வந்தார். பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளை செய்வதற்கு வாய்ப்பு பெற்றிருந்தார். இஸ்லாமாபாத்தின் முன்னாள் அமீர் ஆவார். லாஹுரின் துணை அமீர், கஸா போர்டின் உறுப்பினர், ஃபிக்காஹ் கமிட்டியின் உறுப்பினர் போன்ற பல பொறுப்புகளை வகித்தவர். ஷஹாதத்தின் போது அவரது வயது 83. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. ஜுமுஆ நாளிற்காக ஆயத்தமாகி கொண்டு தமது அறையிலிருந்து வெளி வந்தவாறு, எனக்கு மிகவும் பலவீனமாகி விட்டது. 12.00 மணிக்கு ஜுமுஆவுக்கு போக வேண்டும் என்று மகனிடம் கூறினார். இவ்வளவு சீக்கிரம் போய் என்ன செய்யப் போகிறீர்கள் என்று மகன் கேட்டார். மக்களைத் தாண்டி தாண்டி சென்று முதல் வரிசையில் உட்கார நான் விரும்பவில்லை. (எனவே முன்னரே சென்று முதல் ஸஃப்பில் அமர வேண்டும்) அவரது மகனும் பேரனும் கூட உடன் இருந்தனர். மகனுக்கு டியூட்டி இருந்தது. பேரனை தன்னோடு உட்கார வைத்துக் கொள்ளுமாறு கூறிய போது முடியவே முடியாது என்று கூறி விட்டார். ஆனால் வழக்கமாக இவர் தமது பேரனை தன் அருகில்தான் வைத்திருப்பார். எனவே இவரது மகன் ஷஹீதின் பேரனை ஒரு தெரிந்தவரின் அருகில் உட்கார வைத்து விட்டு டியூட்டிக்குப் போய் விட்டார். இவ்வாறு ஷஹீதுடைய மகனையும், பேரனையும் அல்லாஹ் காப்பாற்றினான். ஷஹீது அவர்கள் முதல் ஸஃப்பில் மிஹ்ராபுக்கு அருகில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். இவரது வலது புறத்திலிருந்து துப்பாக்கி சூடு ஆரம்பமானது. இவரது வயிற்றில் குண்டு பாய்ந்தது. ஒருவர் கூறுகிறார்: சவுத்ரி சாஹிப் வெளியில் சென்று விடுங்கள் என்று அமீர் சாஹிப் கூறிய போது, நான் ஷஹாதத்திற்காகத்தான் துஆ

கேட்டேன் என்று கூறினார். இவ்வாறு அமீர் சாஹிப் மற்றும் இந்த ஷஹீது சாஹிப் இருவரது உடலும் ஒன்றாக கிடந்தது தெரிய வந்தது.

மல்லவி பஷீருத்தீன் சாஹிப் ஒரு கனவு கண்டார். ஒரு வெள்ளை நிற பெரிய வாகனம் வந்தது. அதிலிருந்து ‘‘நான் உன்னை எடுத்துக் கொள்ள வந்துள்ளேன்’’ என்ற ஒரு சப்தம் வந்தது. இரவில் சீக்கிரமே தூங்கி விடுவார். பிறகு அதிகாலை ஒரு மணிக்கு எழுந்து தஹஜ்ஜுத் தொழுகை, துஆவில் மூழ்கி விடுவது இவரது பணியாக இருந்தது. சந்திக்கின்றவர்களிடம் எனது நல்ல முடிவுக்கு துஆ செய்யுங்கள் என்பார். கிலாஃபத்துடன் அளவற்ற அன்பு கொண்டவர். ஜமாஅத்தின் சேவையைப் புகழ்ந்து கூறுவார். மக்களிடம் அமர்ந்து தப்லீக் செய்வார். எழுந்து செல்லும் போது யாருக்காவது நான் பேசுவது தவறாக தெரிந்தால் மன்னித்து விடுங்கள் என்று கூறுவார். அனாதையைப் பராமரிக்கும் அமைப்பிற்கு ஓர் தொகையை தொடர்ந்து வழங்கி வந்தார். ரப்வாவில் இருந்து ஒரு பணியாளர் வந்தார். 7வது வரை படித்திருந்த அந்த அனாதைச் சிறுவனை அவருடன் அனுப்பி இந்த சிறுவனை மேற்கொண்டு படிக்க வையுங்கள். உங்கள் பையனுக்கு செலவு செய்வதை இவனுக்கும் செலவு செய்யுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்.

இவரது மகன் இதனை கூறியுள்ளார்: வேறொருவரும் இதுபற்றி எழுதியுள்ளார். இவர் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். மரணத்திற்கு முன் தமது சொத்துகளுக்கான வஸிய்யத் தொகையை செலுத்தி விட வேண்டும்; துஆ செய்யுங்கள் என்று எல்லாரிடமும் கூறி வந்தார். அதேபோன்று ஷஹாதத்திற்கு மூன்று வருடத்திற்கு முன்பு தமது சொத்துகளுக்கான வஸிய்யத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டார். ஷஹீதாவதற்கு சில நாட்களுக்கு முன் தமது எல்லா சந்தாக்களையும் செலுத்தி விட்டார். இஸ்லாமாபாத்தில் பணியாற்றும் போது Control Authority –ல் பதிவாளராக இருந்தார். அப்போது பிரதமரின் பரிந்துரையுடன் ஒரு கோப்பு இவரிடம் வந்தது. அப்போதைய பிரதமர் ஆக பூட்டோ சாஹிப் இருந்தார். கோப்பினை பார்த்த போது சவுத்ரி சாஹிபுக்கு இதில் ஒரு சட்டச்சிக்கல் இருப்பது தெரிய வந்தது. உடனே மறுத்து கோப்பினை திருப்பி அனுப்பி விட்டார்.

நாட்டின் பிரதமரிடமிருந்து ஒரு கோப்பு வருகிறது. இதில் சட்டச் சிக்கல் உள்ளது என்று கூறி அதனை திருப்பி அனுப்பி; இது தவறு; என்னால் அனுமதிக்க இயலாது என்று கூறி திருப்பி அனுப்பி விட்டார். உடனே பூட்டோ நீங்கள் இந்த வேலையைச் செய்யாவிட்டால் மிகக் கடுமையான நடவடிக்கை உம் மீது எடுக்கப்படும் என்று மிரட்டும் தொனியில் குறிப்பு எழுதினார்.

சவுத்ரி சாஹிப் தாம் அஹ்மதி என்பதை எப்போதும் மறைத்ததில்லை. சூழ்நிலைகளைப் பார்த்து அவ்வப்போது தப்லீக் செய்து வந்தார். பிரதமருக்கு இவர் ஓர் அஹ்மதி என்றும் தெரியும். முதல்வர் இவ்விஷயத்தில் சில தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபைப் பற்றியும் தவறாகப் பேசினார். இவ்விஷயம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் எடுத்து வைக்கப்பட்ட போது, ஹுஸுர் துஆ செய்து விட்டு கூறினார்கள். நல்லது. தைரியமாக இருங்கள்; கோழையாக இருந்தால் ராஜினாமா செய்யுங்கள் என்று கூறினார்கள். இவர் ராஜினாமா செய்ய முடியாது என்று முடிவெடுத்தார். ஏனென்றால் நான் ராஜினாமா செய்தால் எதையோ மறைக்கிறேன் என்று என் மீது பழிசுமத்துவார்கள். நான் எதையும் மறைக்கவில்லை. எனவே நான் ராஜினாமா செய்யப் போவதில்லை என்று பூட்டோவிற்கு கடிதம் எழுதினார். பிறகு இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. உமது பணியிலிருந்து நீக்கப்படுகிறீர்கள் என்று மட்டும் இவருக்கு குறிப்பு தெரிவிக்கப்பட்டது. காரணம் கூறப்படவில்லை. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் இந்த பிரச்சனைகளை கூறி துஆவுக்காக கேட்டுக் கொண்டார். ஹுஸுர் துஆ செய்தார்கள். சவுத்ரி சாஹிப் கூறுகிறார்: அடுத்த நாள் காலையில் நான் நடப்பதற்காக வெளியே வந்தேன். அப்போது அமீர் சவுத்ரி அப்துல் ஹக்வெர்க் சாஹிப் என்னை சந்தித்தார்கள். நான் உங்களுக்காக துஆ செய்தேன். அப்போது ‘‘விடுமுறையை கொண்டாடு; மகிழ்ச்சியாக இரு’’ என்று ஒரு சப்தம் வந்தது என்று அமீர் சாஹிப் கூறினார்கள்.

பிறகு பூட்டோவுடைய ஆட்சி வீழ்ந்ததும், Marshal Law –க்காரர்கள் எல்லா அரசு அதிகாரிகளின் பழைய கோப்புகளையும் தேடுதல்வேட்டை நடத்தினர். அப்போது இவரது கோப்பு கிடைத்தது. எந்த

விசாரனையும் இல்லாமல் பணியிலிருந்து நீக்கப்பட்டது தெரிய வந்தது. உடனே பணியில் சேர்ப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பணி நீக்கம் செய்யப்பட்ட 2 வருட காலம் உங்களுக்கு விடுமுறை வழங்கியதாக எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பு எழுதினர். இவ்வாறு இவருக்கு கிடைக்கவிருந்த விடுப்பு குறித்து மற்றொரு சகோதரருக்கு கனவில் காட்டப்பட்டது நிறைவேறியது.

ஓர் எதிரி இவரை வேலையை விட்டு நீக்கினான். இன்னொரு எதிரி இவரை வேலையில் மீண்டும் இணைத்தான். ஸியாவுல் ஹக் இவரை வேலையில் சேர்த்துக் கொண்டான்.

இவரது மகன் கூறுகிறார்: பாதுகாப்பிற்காக இவரது காரை அவ்வப்போது மாற்றிக் கொள்ளுமாறும், தாருஸ் ஸிக்ர் செல்லும் பாதையை மாற்றிக் கொள்ளுமாறும் லாஹூர் (ஜமாஅத்தின்) நிர்வாகம் கூறியது போது, எனது தந்தையார்; சரி அவ்வாறே செய்யலாம் என்றார். காரின் நம்பர் பிளேட் மாறும் குறிப்பாக இந்த காரில் இவர் செல்கிறார் என்று தெரியாமல் போவதற்காக அவ்வாறு அவரது மகன் யோசனை கூறியிருந்தார். அடுத்து அவரது மகன் அவ்வப்போது ஒவ்வொரு ஜுமுஆக்களுக்கும் இடையில் ஒரு ஜுமுஆவுக்கு செல்லாமல் விட்டு விடுமாறு கூறிய போது, ஜுமுஆவை விடமாட்டேன். என்ன நடந்தாலும் நடக்கட்டும். எதிரி என்ன செய்வான்? அதிகபட்சமாக என்னை ஷஹீதாக்குவானா? பிறகு எனக்கு வேறு என்ன வேண்டும்? என்று கூறி விட்டார்.

அடுத்த **ஷஹீது அட்வகேட் சவுத்ரி ஹபீஸ் அஹ்மத் கால்வான் சாஹிப்.** இவரது தந்தை சவுத்ரி நஸீர் ஹுஸைன் சாஹிப் ஸியால்கோட்டைச் சார்ந்தவர் ஆவார். L.L.B. படித்தவர். ஸியால்கோட்டில் முதலில் வகீல் தொழில் செய்தார். பிறகு லாஹூருக்கு மாறி விட்டார். உச்சநீதி மன்றத்திலும் வகீலாக பணியாற்றியுள்ளார். ஷஹாதத்தின் போது இவரது வயது 83. மார்டன் டவுண் மஸ்ஜிதில் ஷஹாதத் நிகழ்ந்தது. ஜுமுஆ தொழுவதற்காக மஸ்ஜித் பைத்துந்நூரின் மெயின் ஹாலில் அமர்ந்திருந்தார். தாக்குதலின் போது மார்பில் குண்டு பாய்ந்ததால் காயமுற்றார். சுவாசம் கொடுக்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அங்கேயே ஷஹாத் நிகழ்ந்தது.

ஓய்வு பெற்ற ஜெனரல் நாஸிர் ஷஹீது, முகர்ரம் முஹம்மது மாலிக் சாஹிப் ஷஹீத், முகர்ரம் சவுத்ரி இஜாஸ் நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அனைவரும் இவரது உறவினர்கள் ஆவர். ஷஹீது மிகவும் மென்மையான இயல்பு கொண்டவர். யாரையும் கடிந்ததில்லை. வீட்டில் பணியாளர்களிடம் கூட நல்ல முறையில் நடந்து கொள்வார். தொழுகையைப் பேணுபவர். பெரும்பாலும் நடந்தே பள்ளிக்குச் செல்வார். இவரது ஒரு மகன் நாஸிர் அஹ்மத் கால்வான் சாஹிப் ஆஸ்திரேலியாவில் துணை அமீராக உள்ளார். நல்லியல்பு கொண்டவர். இவரது தகுதியை அல்லாஹ் உயர்த்துவானாக!

இவரைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. ஏழைகளின் வழக்கை இவர் இலவசமாக நடத்திக் கொடுப்பார். மக்களுக்கு பொருள் உதவி செய்பவர். மார்ஷல் லா காலத்தில் லஜ்னாவின் தேர்வுத்தாளின் ஒரு வாசகத்தை எழுதியதற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது. சவுத்ரி சாஹிப் நல்ல முறையில் வழக்கை நடத்தி அதனை ஒனறுமில்லாததாக ஆக்கிவிட்டார். இவரது இரங்கலுக்காக பல அஹ்மதி அல்லாத நண்பர்கள் வந்தனர். பல காழ்பபுணர்ச்சி கொண்ட மக்களும் இரங்கலுக்காக வந்தனர். முன்னாள் நீதிபதியிடம் இருந்து முன்ஷி அலுவலகத்திற்குப் போன் வந்தது. நீண்ட நேரம் இரங்கல் தெரிவித்தவாறு இருந்தார். அப்போது முன்ஷி சாஹிப் இரங்கல் தெரிவித்தவரிடம், சரி; நீங்கள் ஷஹீதானவருக்காக துஆ செய்யுங்கள், அவரது மக்ஃபிரத்திற்காக துஆ செய்யுங்கள் என்று கூறிய போது, அந்த முன்னாள் நீதிபதியின் பாராபட்சத்தின் இறுதி எல்லையைப் பாருங்கள். அந்த நீதிபதி கூறினார். நான் அவருக்காக அனுதாபப்படுகிறேன். ஆனால் மக்ஃபிரத்திற்காக துஆ செய்ய முடியாது என்று கூறினார். ஜுமுஆ தொழுகையை பைத்துந்நூர் மார்டன் டவுணில் எப்போதுமே தொழுது வந்தார். பார்வை சற்று குறைவானவர். இருந்த போதிலும் மக்ரிப் தொழுகைக்கு நடந்தே வந்து விடுவார். தமது முஹல்லா பள்ளியில் தொழுது விடுவார். மணிக்கணக்கில் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பார்.

அவரது பேத்தியிடம் இவரது ஷஹாதத்தைப் பற்றி கூறிய போது, பேத்தியின் தாய் தனது மகளிடம் உனது தாத்தா இறைவனிடம் போய் விட்டார். அவர் வானத்திறகுப் போய் விட்டார் என்று கூறிய போது அவரது

பேத்தி (சிறுமி) அங்கேயும் போய் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பார் என்று கூறினார். திருக்குர்ஆன் ஓதுவதில் அந்த அளவுக்கு கவரப்பட்டிருந்தார். இவ்வாறு அவர் குழந்தைகளிடம் செயல் முன்மாதிரியைக் காட்டியதுபோன்று, இந்த முன்மாதிரியை ஒவ்வொரு அஹ்மதியும் நிலைநாட்ட வேண்டும்.

அடுத்து **முகர்ரம் சவுத்ரி இம்தியாஸ் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் சவுத்ரி நிஸார் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தை வழிப்பாட்டனார் சவுத்ரி முஹம்மத் பூட்டா சாஹிப் குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1935-ல் பைஅத் செய்தவர். இவரது பாட்டனார் தனியாக அஹ்மதியானார். முழு ஊரும் எதிர்த்தது. இவர் மரணித்த போதும் மவ்லவிகள் கூச்சலிட்டனர். கபருஸ்தான் தர மறுத்தனர். எனவே இவரது சொந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார். நாடு பிரிவினைக்குப் பிறகு இவரது குடும்பம் ஷைவால் பகுதிக்கு வந்தது. 1972 -ல் இவரது தந்தையார் லாஹூர் வந்தார். ஷஹாதத்தின் போது இம்தியாஸ் அஹ்மதின் வயது 34. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். தர்பிய்யத் நவ்முபாயின் செயலராகவும் முன்னாள் அத்ஃபால் செயலராகவும், வெளியீட்டுச் செயலராகவும் போன்ற தொண்டுகளைச் செய்தார். இவரது ஷஹாதத் மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் நடந்தது. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரின் மெயின் கேட்டின் வலது புறம் டியூட்டியில் இருந்தார். தீவிரவாதிகள் தாக்கிய போது அவனைப் பிடிக்க ஓடினார். அப்போது சுடப்பட்டதில் காயமுற்றார். மார்பிலும் தலையிலும் குண்டு பாய்ந்தது. இதன் விளைவாக சம்பவத்தின் ஆரம்ப ஷஹீதுகளின் ஒருவராக சேர்ந்து விட்டார். ஜமாஅத் பணிகளில் முன்னணியில் நிற்பவர். (மஜ்லிஸே) ஷூராவின் பிரதிநிதி ஆக இருந்தார். சிறு வயதிலேயே அத்ஃபால் பணிகளில் நல்ல முறையில் பங்கேற்பார். நூற்றாண்டு விழாவின் போது தமது ஹல்கா (கிளை) வில் நல்ல தொண்டாற்றினார். டியூட்டியை மிகச் சிறப்பாக செய்வார். பொதுவாக கேட்டுக் வெளியில் டியூட்டியில் நிற்பார். தொழுகைகளை நிறைவேற்றுவதில் ஒழுங்காக இருப்பார். தமது இரு பையன்களை அருளுக்குரிய வக்ஃபே நவ் திட்டத்தில் இணைத்திருந்தார். ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு கண்ணியம் செய்பவர். Leadership -ன் தகுதி இருந்தது. தன்னை வக்ஃப் செய்ய விருப்பம் இருந்தது. டியூட்டியையும் தன்னை வக்ஃப் ஆக கருதி செய்து வந்தார். இவரது டைரியின் முதல் பக்கத்தில் எழுதியுள்ள வாசகத்தை பலர் பார்த்திருக்கின்றனர். அவ்வாசகம் கோழைக்கு பலமுறை மரணம் வரும். வீரனுக்கு ஒரு முறை தான் மரணம் வரும்.

பிறகு இவரது ஒரு சகோதரி அமெரிக்காவில் வாழ்கிறார். கொஞ்ச நாள் முன்பு பாகிஸ்தான் வந்திருந்தார். அவர் தனது சகோதரரிடம் ஒரு டைரியைக் கொடுத்து இதில் ஏதாவது எழுதுங்கள் என்று கூறிய போது, ஒரு கவிதையை எழுதினார். அதன் பொருள்: அன்பு, நேசம் மற்றும் விசுவாசத்தின் பண்பு நம்மில் ஒரு மஸீஹின் துஆவின் விளைவாக பிறந்தது.

ஷஹாதத்திற்கு முன்னால் இவருக்கு ஒரு கனவு வந்தது. அதன் பிறகு அவர் என்னிடம் நேரம் குறைவாகவே உள்ளது. எனவே உனது சொந்தக் கால்களில் நில் என்று கூறினார். உடனே ஒரு வியாபாரமும் தொடங்கினார். எப்போதும் தஹஜ்ஜுத் தொழுபவர். தொழுகை மையத்தில் தனது தந்தையும் போய் தொழுது வந்தார். தன்னுடைய மனைவிக்காவும் தொழிலை சிறிது விரிவுபடுத்தினார். ஒருமுறை இரவு 12.30 மணிக்கு வீட்டிற்கு வந்தார். 3.30 மணிக்கு எழுந்தார். சிறிது ஓய்வெடுங்கள் என்று கூறிய போது இவ்வுலகின் ஓய்வை நான் பொருட்படுத்தப் போவதில்லை. இனி வரவிருக்கிற ஓய்வுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதே எனது கவலை என்றார்.

அடுத்து **முகர்ரம் இஜாஸுல் ஹக் சாஹிப் ஷஹீது.** இவர் ரஹ்மத் ஹக் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான ஹஸ்ரத் இலாஹி பக்ஷ் சாஹிபுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர். அம்ரிஸ்தர் மாவட்டத்தைச் சேர்ந்த பாட்டியாலாவைச் சார்ந்தவர். தந்தையார் ரயில்வே ஊழியர். லாஹூரில் தங்கியிருந்தார். Electronics Repair வேலையை ஷஹீது மர்ஹூம் செய்து வந்தார். ஒரு தனியார் சேனலில் சேட்டிலைட் டெக்னிஷியனாகவும் வேலை செய்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 46. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். சம்பவத் தினத்தன்று M.T.A.-வில் உறுதிமொழி ஒளிபரப்பாகியது. அப்போது தமது தலையில் துண்டை போட்டுக் கொண்டு எழுந்து நின்று அந்த உறுதிமொழியை திரும்பக் கூறினார். அதனைப் பார்த்து

மனைவியும் உறுதிமொழி எடுத்தார். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆ தொழுவார். சம்பவ நாளன்றும் காலையில் வேலையிலிருந்து நேராக ஜுமுஆ தொழுகைக்கு வந்தார். வெளியே மாடிப்படிக்குக் கீழ் உட்கார்ந்திருந்தார். தீவிரவாதிகள் நுழைந்ததும் வீட்டிற்கு போன் செய்தார். மூத்த சகோதரரிடம் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு உடனே பள்ளிக்கு வா என்றார். கூடவே தொலைக்காட்சி சேனலுக்கு போன் செய்து Report செய்தார். அதே வேளையில் குண்டு பொழிந்ததில் அதே இடத்தில் ஷஹீதானார்.

வீட்டினர் கூறினர்: மிகவும் அனுதாப குணமுள்ளவர். பழகுவதற்கு எளிமையானவர். எல்லாருடனும் நல்ல முறையில் நடந்து கொள்பவர். சந்தாக்களை முறைப்படி கொடுப்பவர். ஒவ்வொரு பொருளாதார திட்டத்திலும் தீவிரமாக பங்கெடுப்பவர். ஹல்காவின் அத்ஃபால் செயலர் இவரைப் பற்றி குறிப்பிடும் போது இவரது பையன்களை வகாரே அமல் அல்லது டியூட்டிக்காக அழைத்துச் சென்று விட்டு திரும்ப கொண்டு விடுவதற்காக வந்தால் நீங்கள் சேவை செய்ய வாய்ப்பினை வழங்கியுள்ளீர்கள் என்று நன்றி கூறுவார் என்று கூறினார்.

அடுத்த **ஷஹீது சேக் நதீம் அஹ்மத் தாரிக் சாஹிப்.** இவர் சேக் முஹம்மத் மன்ஷா சாஹிபின் மகன் ஆவார். ஷஹீதின் குடும்பத்தினர் சன்யூட் என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். இவரது தந்தை தொழிலுக்காக கல்கத்தா சென்றிருந்தார். 1947 -க்குப் பிறகு கல்கத்தாவிலிருந்து டாக்கா போய் விட்டார். அங்கிருந்து 1971 -ல் லாஹூர் வந்தார். இவரது மனைவியும் கல்கத்தாவைச் சார்ந்தவர். இவரது மனைவியின் தந்தை வழிப்பாட்டனார் சேட் முஹம்மது யூசுஃப் சாஹிப் பானி என்பவர் முகர்ரம் சித்தீக் பானி சாஹிபின் தம்பி ஆவார். ஷஹீது மர்ஹூம் I.Com படித்த பிறகு உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் வியாபாரம் செய்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 40. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. எப்போதும் தாருஸ் ஸிக்ரில்தான் ஜுமுஆ தொழுவார். M.T.A.-வில் என்னுடைய குத்பா நேரடி ஒளிபரப்பைப் பார்த்து விட்டுதான் வீடு திரும்புவார். சம்பவ நாளன்று அமீர் சாஹிப் அருகில் அமர்ந்திருந்தார். வலது கை வீக்கம் அடைந்துள்ளது. மற்ற இடத்தில் காயங்கள் எதுவுமில்லை. கையிலிருந்து இரத்தம் கொட்டியதால் மரணித்திருப்பார் என்று தோன்றுகிறது.

உறவுகளைப் பேணக்கூடியவர். மென்மையானவர். வேலையில் இருக்கும் போது கூட போன் செய்து குழந்தைகள் தொழுதார்களா? என்று விசாரிப்பார்கள். வேலை நேரத்தில் தொழுகை நேரம் வந்து விட்டால் குழந்தைகளை தொழுமாறு கூறுவார். இவ்வாறுதான் ஒவ்வொரு தந்தையும் தனது குழந்தைகளின் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய முறையாகும். இதனால் துஆ, இறைத்தொடர்பின் வழக்கம் ஏற்படும். 4 கிலோ மீட்டர் தூரம் சென்று ஜமாஅத்துடன் தொழுது வந்தார். தஹஜ்ஜுத் தொழுகைகளை கவனமாக தொழுது வந்தார். இங்கு (ஜெர்மனி) நான்கு கிலோ மீட்டர் தூரம் என்பது ஒரு பொருட்டல்ல. நல்ல பாதைகள், சவாரிகள் உள்ளன. அங்குள்ள டிராஃபிக்கில் அவ்வாறு செய்வது மிகவும் சிரமமாகும். பொருள் தியாகத்தில் முன்னணியில் நின்றவர். ஹல்கா மஸ்ஜிதின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றி வந்தார். ஜமாஅத் தேவைக்காக எவராவது இவரது மோட்டார் சைக்கிளை கேட்டால் கொடுத்து விட்டு, தான் ரிக்ஷாவில் செல்வார். கித்மத்தே கல்க் பணியை மிகவும் நல்ல முறையில் செய்து வந்தார். இவரது குடும்பத்தின் மற்ற நபர்களும் சரி தம்மால் முடிந்தவரை பொருள் தியாகத்தில் முன்னணியில் நிற்பவர்களாக உள்ளனர்.

அடுத்த **ஷஹீது ஆமர் லத்தீப் புராச்சா சாஹிப்.** இவர் அப்துல் லத்தீப் புராச்சா சாஹிபின் மகன் ஆவார். ஷஹீதுடைய தந்தை சர்கோதா மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஷஹீதுடைய தந்தை சர்கோதா ஜமாஅத்தில் செயற்குழுவின் செயல்திறனுள்ள உறுப்பினராக இருந்தார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் நல்ல நெருக்கம் இருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஜாபா என்ற ஊருக்குச் செல்லும் போதெல்லாம் அப்துல் லத்தீப் சாஹிபுடைய வீட்டில் தங்குவார்கள். ஷஹீதுடைய தந்தையாரின் தாய்வழிப் பாட்டனார் பாடி முஹம்மத் அமீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய கையில் பைஅத் செய்தவர். ஷஹீது மர்ஹூம் ஆரம்பக் கல்வியை சர்கோதாவில் பயின்றார். பிறகு லாஹூரில் M.B.A. படித்தார். சந்தாக்களை ஒழுங்காக கொடுப்பவர். பெரியவர்களுக்கு தொண்டு செய்பவர். சர்கோதா மாவட்டத்தின் முன்னாள் அமீர் மிர்ஸா அப்துல் ஹக்

சாஹிபுடன் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். சம்பவத் தினத்தில் தனது சகோதரருக்கு போன் செய்து என்னைச் சுற்றி உயிர்த்தியாகிகளின் சடலங்கள் கிடக்கின்றன என்று கூறினார். இவரது முகத்தில் துப்பாக்கியை வைத்து அடித்த அடையாளம் இருந்தது. தீவிரவாதிகள் சிலர் இறந்து விட்டார்களா? இல்லையா? என்று உறுதி செய்வதற்காக துப்பாக்கியைக் கொண்டு முகத்தில் அடித்துப் பார்த்துள்ளனர். ஒரு குண்டின் அடையாளம் இவரது கையிலும் இருந்தது. தாருஸ் ஸிக்ரில் மாடிப்படிக்குக் கீழ் அமர்ந்திருந்தார். அங்கேயே **ஷஹீத்** ஆனார். இவரது வீட்டினர் கூறுகின்றனர். மிகவும் நேர்மையானவர். ஈமான் உள்ளவர். இவரது நேர்மையின் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் பணமதிப்புள்ள நகைகள் இவரிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டிருந்தன. அஹ்மதிய்யத்தை ஒருபோதும் மறைத்து வைக்கவில்லை. தந்தையார் நீண்ட காலமாக நோயுற்றிருந்த போது தந்தை மரணிக்கும் வரை அவருக்கு தொண்டு செய்து வந்தார். அதேபோன்று இவரது தாயாரும் நோயுற்றிருந்தார். அவருக்கு நிறைய தொண்டு செய்தார். சந்தாக்கள் பொருளாதார திட்டடங்களில் மகிழ்ச்சியோடு பங்கெடுப்பார். சதகாக்களை பொதுவாக மறைவாக கொடுத்து வந்தார். தமது பூர்வீக ஊராகிய சர்கோதாவில் நோயுற்றவர்களை லாஹூர் அழைத்து வந்து சிகிச்சை அளித்தார். தியாக உணர்வு உள்ளவர். தொழுகையை பேணுபவர். குர்ஆனை ஒழுங்காக ஓதுவார். இரவில் 2.30 - 3.00 மணிக்கெல்லாம் எழுந்து தஹஜ்ஜுத் தொழுவதையும் குர்ஆன் ஓதுவதையும் கண்டதாக வீட்டினர் கூறுகின்றனர்.

**ஷஹீது** மர்ஹூமின் தாயார் கூறுகிறார்: **ஷஹீது** மர்ஹூமின் மரணித்த தந்தையை சிறிது காலம் முன்பு தொடர்ச்சியாக கனவில் பார்த்து வருகிறேன். அவரது பணிப்பெண் கூறுகிறார்: **ஷஹீது** சாஹிப் **ஷ**ஹாதத்திற்கு சில நாட்களுக்கு முன்பு 4 புத்தாடைகள் கொண்டு வந்து தாயாரிடம் கொடுத்தார். அப்போது தாயார், என்னிடம் நிறைய புத்தாடைகள் உள்ளன என்று கூற, **ஷஹீத்** சாஹிப், அம்மா இன்னும் எவ்வளவு நாள் நான் இருப்பேன் என்று தெரியாது. நான் தைத்துக் கொண்டு வந்த இந்த ஆடையை அணியுங்கள் என்று சொல்லிக் கொடுத்தார்.

அடுத்த **ஷஹீது மிர்ஸா ஸஃபர் அஹ்மத் சாஹிப்.** இவர் மிர்ஸா ஸப்தர் ஜங்க் ஹுமாயூன் உடைய மகன் ஆவார். **ஷஹீத்** மர்ஹூம் அக்டோபர் 1954 -ல் மண்டிபஹாவுதீனில் பிறந்தார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கிலாஃபத்தில் **ஷஹீதின்** தந்தை வழிப்பாட்டனார் முகர்ரம் மிர்ஸா நஸீர் அஹ்மத் மூலமாக இவரது குடும்பத்திற்கு ஜமாஅத் கிடைத்தது. மிர்ஸா நஸீர் அஹ்மத் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார். மெட்ரிக் முடித்தார். பிறகு ராயல்பூரில் கல்சரஸ் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடங்கள் படித்தார். விடுதியில் சில பிரச்சனைகளால் படிப்பை விட்டு விட்டு கராச்சி வந்தார். அங்கு மெக்கானிக்ஸ் டிப்ளமோ முன்று வருடங்கள் பயின்றார். பிறகு இன்னும் ஒரு வருட கோர்ஸ் படித்தார். கராச்சியில் தமது துறை சம்பந்தமாக ஒரு வேலை பார்த்தார். பிறகு ஜப்பான் சென்றார். அங்கு 1981 முதல் SOLAR Engineer ஆக 21 வருடங்கள் பணி செய்தார். அங்கு ஜமாஅத்திற்கு சேவை செய்யும் வாய்ப்பு பெற்றார். டோக்கியோ மி**ஷ**ன் ஹவுஸ் மூடப்பட்டபோது இவரது வீடு தான் மி**ஷ**ன் ஹவுஸ் ஆக செயல்பட்டது. 1983 -ல் கோரியாவில் வக்ஃபே ஆர்ஸியாக (தற்காலிகமாக ஜமாஅத்திற்கு தம்மை ஒப்படைத்தல்) பணியாற்றும் வாய்ப்பு பெற்றார். 1985 -ல் ஜப்பானின் பிரதிநிதியாக ஜல்ஸா ஸாலானா U.K. -ல் கலந்து கொண்டார். 1993 -ல் பாகிஸ்தானின் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்த போது ஒரு மலை உச்சியின் மீது ஏறி அங்கிருந்து பாங்கு கொடுக்கும் நல்வாய்ப்பும் இவருக்க கிடைத்தது. 1999-ல் பைத்துல் ஃபுதூஹின் அடிக்கல் நாட்டு விழாவில் ஜப்பானின் பிரதிநிதியாக கலந்து கொள்ள இவருக்கும் இவரது மனைவிக்கும் வாய்ப்பு கிடைத்தது. டோக்கியோ ஜமாஅத்தின் சதர் ஆகவும், கட்டாயச் சந்தா செயலராகவும், 2001 - 2003 வரை ஜப்பான் ஜமாஅத்தின் துணை அமீராகவும் பணியாற்றினார். ஒரு முறை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவரது கட்டுப்படுதல் மற்றும் இறையச்சத்தின் தரத்தைப் பார்த்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு ஜப்பான் ஜமாஅத் முழுவதையும் இவரது முன்மாதிரியின்படி நடக்கும் வாய்ப்பினை அல்லாஹ் வழங்குவானாக என்று கூறினார்கள்.

ஜப்பானில் 21 வருடங்கள் தங்கியிருந்த போது வேலை தவிர மற்ற படிப்புகளையும் படித்து வந்தார். 2003 -ல் பாகிஸ்தானுக்கு மாற்றல் ஆனார். அங்கும் இவருடைய வீடு தொழுகை மையமாகவே

செய்யப்பட்டது. ஷஹாதத்தின் போது இவரது வயது 56. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தைப் பெற்றார். எப்போதும் முதல் ஸஃப்பில் இருப்பார். அங்குதான் இமாமுக்கு அருகில் அமர்ந்திருந்தார். இவரது தலையின் பின்பக்கம் குண்டு பட்டது. வலது கையில் கிரானைட் வெடித்தது. படுகாயமுற்று ஷஹீதானார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் உள்ளவர். இலண்டன் செல்லும் போதெல்லாம் கலீஃபாவின் பின்னால் தொழுவதற்கு முயற்சி செய்வார். குத்பாக்களை மிகவும் கவனமாகக் கேட்பார். ஏதாவது காரணத்தால் குத்பாவை நேரடியாக கேட்க முடியாமல் போய் விட்டால், பிறரிடம் கேட்டு தெரிந்து கொள்வார். குத்பாவை கேட்காத வரை நிம்மதி அடையமாட்டார். எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்பதை உண்மைப்படுத்திக் காட்டுபவராக இருந்தார். குழந்தைகள், பெரியவர்கள் எல்லாருடனும் நட்புடன் பழகுவார். அமானத்தைப் பாதுகாப்பவர். வாக்கை காப்பாற்றுபவர். தியாகத்தின் உன்னதமான தகுதியைப் பெற்றிருந்தார். எப்போதும் சாதாரணமாக இருப்பவர். மிகவும் அன்பு செலுத்தும் நல்ல கணவர் ஆவார். சின்னச்சின்ன விஷயங்களிலும் கவனம் செலுத்துவார். நான் களைப்புற்றால் சில வேளை தாமே உணவும் சமைப்பார். குறைபட்டுக் கொள்ளும் பழக்கம் இல்லை. ஜப்பானைச் சேர்ந்த மலக் முனீர் அஹ்மத் சாஹிப் எழுதுகிறார். மிர்ஸா ஸஃபர் அஹ்மத் சாஹிப் ஜப்பான் வரும் போது அவருக்கு திருமணம் ஆகி இருக்கவில்லை. மிகவும் குறைவாகவே பேசுவார். சாதாரணமாக இருப்பார். நல்லியல்பு கொண்டவர். நேரிய வாழ்க்கை, மார்க்கத் தொண்டாற்றும் உணர்வு அவரிடம் நிறைந்த காணப்பட்டது. கட்டுப்படுதல் உள்ளவர். சின்னச்சின்ன பொறுப்பாளர்கள் முதல் பெரிய பொறுப்பாளர்கள் வரை ஒரே மாதிரியாக நடந்து கொள்வார். மரியாதையுடன் நடந்து கொள்வார். எந்த ஜமாஅத் பணிகளையும் மறுக்கமாட்டார். ஒரு வருடம் ஜப்பானின் மிசாலி காதிம் (முன்மாதிரியான காதிம்) ஆக புகழப்பட்டார். பொறுப்பேற்றுக் கொண்ட எப்பணியையும் ஈமானுடன் செய்வார். ஜப்பானிலிருந்து செல்வதற்கு முன்பே தம்மை மார்க்கத்திற்காக முழுமையாக அர்ப்பணித்தார்.

நமது முரப்பியாகிய மக்பூர் அஹ்மத் முனிப் சாஹிப் ஜப்பானிலிருந்து எழுதுகிறார்: மார்க்கப் பணிகளில் நமது ஷஹீதுடைய சேவை மார்க்கத்திற்காக அர்ப்பணித்த ஒருவரின் சேவையை விட குறைந்ததில்லை. பிறரும் பின்பற்றத்தக்க வகையில் இவரது பணிகள் அமைந்திருந்தன. நேரத்தின் தியாகம், பொருள் தியாகம் அனைத்திலும் முன்னணியில் இருப்பார். பொருளாளராகவும், டோக்கியோ ஜமாஅத்தின் சதர் போன்ற பொறுப்புகளை வகித்து வந்தார். கிலாஃபத்தின் மீது பேரன்பு கொண்டவர். ஒவ்வொருவரின் துயரத்திற்காகவும் வருந்துவார்.

அடுத்து **மஹ்மூது அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் அக்பர் அலி சாஹிபின் மகன் ஆவார். இவர் நாரோவால் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தைவழிப் பாட்டனார் இனாயத்துல்லாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார். தொலைபேசித் துறையில் பணியாற்றி 2008 -ல் ஓய்வு பெற்றார். 35 வருடங்களாக லாஹூரில் வசித்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 58. பைத்துந்நூர் மார்டன் டவுனில் இவர் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். ஜுமுஆ தொழுகையை மார்டன் டவுனில் தொழுது வந்தார். சம்பவத்தன்று பள்ளியின் முக்கிய அறையில் அமர்ந்திருந்தார். நெற்றியில் ஒரு குண்டு பட்டது. அதே இடத்தில் ஷஹீதானார்.

வீட்டினர் கூறுகின்றனர்: ஜமாஅத் பணிகளில் எப்போதும் முன்னணியில் நிற்பவர். வக்ஃபே ஆர்ஸி (தற்காலிக அர்ப்பணிப்பு) செய்வதற்கு பலமுறை இவருக்கு வாய்ப்பு கிடைத்தது. மிகவும் மென்மையானவர். சாதாரண இயல்பு கொண்டவர். உழைப்பாளி. இவரது மகன் கெய்ஸர் மஹ்மூது சாஹிப் அவ்வேளையில் டியூட்டியில் இருந்தார். விபத்தில் பாதுகாப்பாக இருந்தார். ஷஹாதத்திற்கு நான்கு நாட்களுக்கு முன் இவரது மனைவி ஒரு கனவு கண்டார். ஓர் அழகிய தோட்டம் இருக்கிறது. அதில் குளிர்ந்த காற்று வீசுகிறது. ஆறும் ஓடுகிறது. அதில் ஓர் அழகிய அரண்மனை உள்ளது. மஹ்மூது சாஹிப் ஷஹீது என்னிடம், உங்களுக்காக இந்த வீட்டைக் கட்டியுள்ளேன். இது எனது அரண்மனை ஆகும். நான் இங்கு தான் இருக்கப் போகிறேன் என்று கூறுகிறார். அரண்மனை முழுவதும் நல்ல நறுமணம் வீசுகிறது. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

**முகர்ரம் சேக் முஹம்மத் அக்ரம் அக்தர் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் சேக் ஷம்சுதீன் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தையார் சர்கோதா மாவட்டத்தைச் சேர்ந்தவர். பிளேக் நோயினால் இவரது எல்லா உறவினர்களும் வஃபாத் ஆகி விட்டனர். மிட்ராஞ்சா என்ற சர்கோதா மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் ஊரில் சென்று குடியேறினார். ஷஹீது மர்ஹூமுடைய தந்தை மற்றும் பாட்டனாருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கைகளைப் பிடித்து விடுவது போன்ற தொண்டுகளை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இவருக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய காலத்தில் பைஅத் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. ஷஹீது மர்ஹூமின் மாமானார் காஜா முஹம்மது ஷரீஃப் சாஹிப் (ரலி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார். இவரது தந்தையான சம்சுத்தீன் சாஹிபுடைய தப்லீகினால் ஹஸ்ரத் மிர்ஸா அப்துல் ஹக் சாஹிபுடைய குடும்பத்திற்கு அஹ்மதிய்யத் கிடைத்தது. மவ்லவி அதாவுல்லாஹ் கான் சாஹிப் தர்வேஷ் காதியான் இவரது சகோதரியின் கணவர் ஆவார்.

முகர்ரம் முனீர் அஹ்மத் சாஹிப் முரப்பி (கொள்கைப் பரப்புநர்) முன்னர் இங்கு (ஜெர்மனியில்) இருந்தார். இப்போது போலந்தில் இருக்கிறார். அவர் இவரது சகோதரியின் மகன் ஆவார். ஷஹாதத்தின் போது இவரது வயது 66. தாருஸ் ஸிக்ர் மஸ்ஜிதில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். மஸ்ஜிதின் மெயின் ஹாலில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். முதுமையால் கடைசியில் தான் எழுந்தார். தீவிரவாதிகளின் குண்டு அதற்குள் இவரது தலையிலும், விலாவிலும் பட்டதால் ஷஹீதானார்.

வீட்டினர் கூறுகின்றனர்: ஷஹீது சாஹிப் 2-3 மாதங்களாக எனது நேரம் நெருங்கி விட்டது என்று கூறி வந்தார். கொஞ்சகாலமாக இவர் மிகவும் அமைதியாக இருந்தார். இவரது மருமகள் கனவில் கண்டுள்ளது பற்றி கூறியதாவது, ரப்வாவில் அன்சாருல்லாஹ் ஹால் இருக்கிறது. அதனை முன்னர் நான் பார்த்ததில்லை. அங்கிருந்து எனக்கு மூன்று அன்பளிப்புகள் கிடைக்கின்றன. அதனை வாங்கிக் கொண்டு லாஹூருக்கு புறப்படுகின்றேன் என்று கனவில் கண்டார்.

இந்த எல்லா ஷஹீதுகளின் ஜனாஸாவும் அன்சாருல்லாஹ் ஹாலில் தான் நடந்தது. ஷஹீது மர்ஹூமுக்கு தப்லீகில் மிகவும் ஆர்வம் இருந்தது. கிராமப்புறங்களில் சென்று பல்வேறு தரப்பினரிடம் தப்லீக் செய்வார். சட்டைப் பையில் அல் பஸ்ல் உருதுப் பத்திரிகையை வைத்திருப்பார். சிகரெட் குடிப்பவர்களை தடுப்பார். சிறிது சிறிதாக நிறுத்தவும் வைத்துள்ளார். மற்ற பொருள்களைக் கொடுத்து இதனை சாப்பிட்டு சிகரெட் குடிப்பதை நிறுத்தப் பழகுங்கள் என்று கூறுவார். தஹஜ்ஜுத் தொழுபவர். நல்லியல்பு கொண்டவர். இவரது தப்லீகினாலும் தூய நடத்தையாலும் பல சம்பந்தங்கள் உருவாகியுள்ளன. துஆ செய்பவர்; தஹஜ்ஜுத் தொழுபவர். குறிப்பாக மக்களின் பெயரைக் கூறி துஆ செய்வார். சந்தாவை முறைப்படி தருவார். சம்பளம் கிடைத்ததும் சந்தா ஆம் செயலரின் வீட்டிற்கு சென்று சந்தாவை கொடுத்து விடுவார். இதுவே சந்தா கொடுப்பதற்கான சரியான வழிமுறையாகும். சிலருக்கு சந்தாவில் அதிகமான பாக்கி ஏற்படும்போது நீங்கள் ஏன் முறைப்படி சந்தா கொடுப்பதில்லை என்று கேட்டால், செயலர் எனக்கு கவனமூட்டவில்லை என்று திருப்பிக் கூறுகின்றனர். சந்தா கொடுப்பது ஒவ்வொருவரின் சுய கடமையாகும். கிலாஃபத் ஜுப்ளி கட்டுரைப் போட்டியில் A Grade பெற்றார்.

அடுத்து **மிர்ஸா மன்சூர் பேக் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் மிர்ஸா சர்வர் பேக் சாஹிப் மர்ஹூமின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் மூதாதையர் அமிர்தசரஸ் மாவட்டத்தை சார்ந்தவர்கள். இவரது பெரியப்பா மிர்ஸா முனவ்வர் பேக் சாஹிப் 1953க்கு முன்னர் பையத் செய்தவர். 1985- ல் அஹ்மதிய்யத்தின் எதிரியால் இவரது பெரியப்பா ஷஹீதாக்கப்பட்டார். மிர்ஸா மன்சூர் சாஹிபிற்கு ஷஹாதத்தின் போது 29 வயது. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். இஷாத் செயலர், தஹ்ரீகே ஜதீத் செயலர், உமூமி, டியூட்டி ஸ்கார்ட் போன்ற பணிகளை செய்து வந்தார். பைத்துந்நூர் மார்டன் டவுணில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். ஜுமுஆ நாளில் இவரது மஜ்லிஸின் காயித் சாஹிப் டியூட்டிக்குச் செல்லுமாறு கூறினார். 11.00 மணிக்கு மீண்டும் நினைவூட்டுவதற்காக போன் செய்தார். காயித் சாஹிப் கவலைப்படாதீர்கள்; தேவைப்பட்டால் முதல் குண்டை எனது மார்பில் ஏந்துவேன் என்று கூறினார்.

பைத்துந்நூர் மார்டன் டவுனில் இவருக்கு டியூட்டி இருந்தது. மெயின் கேட்டிற்கு வெளியில் இவர் நிற்க வேண்டிய இடம் இருந்தது. குத்தாம்களை கண்காணிக்கும் பொறுப்பில் இருந்தார். வரும்போதே தீவிரவாதிகள் இவர் மீது சுட்டு விட்டனர். முதல் துப்பாக்கி சூடு இவர் மீதுதான் விழுந்தது. பல குண்டுகள் பாய்ந்ததால் அந்த இடத்திலேயே ஷஹீதாகி விட்டனர். ஷஹீது மர்ஹூமின் விபத்து நடந்த அன்று காலையில் வீட்டினரிடம் தான் கண்ட ஒரு கனவைக் கூறினார். என்னை ஒருவர் அடிக்கிறார். எனக்கு பின்னால் கருப்புநிற நாய்கள் இருக்கின்றன.

ஷஹீது மர்ஹூம் கட்டுப்பதல் உள்ளவர். மென்மை, சிரித்த முகம் உடையவர். ஐவேளை தொழுகையில் பேணுதல் உள்ளவர். இவரது மனைவியின் வயது 26 ஆகும். திருமணம் ஆகி, குழந்தை பிறக்க உள்ளது. அல்லாஹ் சாலிஹான ஆரோக்கியமான, நீண்ட ஆயுள் உடைய குழந்தையை இவருக்கு வழங்குவானாக. தாயாரும், மனைவியும் மகிழ்ச்சியை மட்டுமே பார்க்கட்டும்!

அடுத்த **ஷஹீது மியான் முஹம்மத் முனீர் அஹ்மத் சாஹிப்.** இவர் மவ்லவி அப்துஸ் ஸலாம் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பேரர் ஆவார். 11 அக்டோபர் 1940 –ல் தெற்கு ஹைதராபாத் தக்கனில் உள்ள இவரது தாய்வழிப்பாட்டனார் மீர் முஹம்மது ஸயீது சாஹிபுடைய வீட்டில் பிறந்தார். இவரது தாய்வழிப்பாட்டனாருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள பைஅத் வாங்க அனுமதி அளித்தார்கள். இவரது நாநா ஹஸ்ரத் மீர் முஹம்மது ஸயீது சாஹிபின் காரணமாக தெற்கு ஹைதராபாத்தின் இவரது சீடர்கள் பலர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஷஹீது சாஹிப் B.A.வரை படித்தவர். 1962 –ல் லாஹூரில் குடியமர்ந்து, பைத்துந்நூரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். ஷஹாதத்தின் போது இவரது வயது 70. ஜுமுஆ தொழுவதற்காக ஒவ்வொரு ஜுமுஆ தினத்தன்றும் 12.00 மணிக்கே வீட்டை விட்டு வெளியேறி விடுவார். ஆனால் சம்பவத்தன்று உடல்நிலை சரியில்லாததால் பிற்பகல் 1.00 மணிக்கு பள்ளிக்கு சென்றார். மஸ்ஜித் வளாகத்தில் ஜெனரல் நாஸிர் சாஹிப் அருகில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். தாக்குதல் நடந்த போது ஹாலுக்குள் வந்து முதல் ஸஃப்பில் அமர்ந்திருந்தார். கதவை மூட முயற்சி செய்த போது தீவிரவாதி துப்பாக்கியை கதவின் துளையில் வைத்து சுட்டான். குண்டு இவரது தலையில் பட்டு அந்த இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு இவர் ஒரு கனவு கண்டார். அதில் ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களுடைய கபருக்கு அருகில் ஒரு கபர் தயார் செய்யப்படுகிறது. இது யாருக்காக என்று கேட்ட போது, உங்களுக்குத்தான் என்று பதில் வந்தது.

ஷஹாதத்திற்குப் பிறகு இவர் கண்ட கனவுக்கு பொருள் புரிய வந்தது. இவர் ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களுடைய சந்ததியில் வந்தவர். ஷஹாதத்தும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு நடந்தது போன்றே (தொழும் இடத்தில்) நடந்துள்ளது. ஷஹாதத்திற்குப் பிறகு இவரது மகள் கனவில், ஷஹீதாகிய தந்தையார் வந்து எனது அறையை சரி செய் என்று கூறுகிறார். கனவில் கண்டபடி இவரது வீட்டில் இருந்த ஷஹீது மர்ஹூம் அறையை சரி செய்த பிறகு வெளியிலிருந்து சிலர் வந்து ஷஹீது மர்ஹூம் வாழ்ந்த அறையைக் காண விரும்புவதாகக் கூறினர்.

ஷஹீது மர்ஹூமின் மகன் முகர்ரல் நூருல் அமீன் வாசிப் சாஹிப் கூறுகிறார்: ஷஹீது மர்ஹூமுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்ட போது, சிலர் இவரை லாஹூரி பிரிவினருள் ஒருவராக காட்டினர். அதாவரு இவர் கிலாஃபத்திற்குப் பிறகு பைஅத் செய்யாதவர்களைச் சேர்ந்தவர் ஆவார் என்று கூறினர். இந்தப் பிரச்சனை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் கொண்டு செல்லப்பட்டது. அப்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், இவரது பைஅத்தை புதுப்பிக்க வேண்டிய அவசியம் என்ன? இவரது பாட்டனார் முதன் முதலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தவர். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் பிரியத்திற்குரியவரும் ஆவார். இவ்வாறு இவர் அஹ்மதி தான் என்று உறுதியானதும் ஹஸ்ரத் அபுல் அத்தா சாஹிப் ஜலந்தரி அவர்கள் இவரது நிகாஹ்வை நடத்தி வைத்தார்கள். அவரது உறவினர் ஒருவர் இவரது சிறப்புகளை கூறிய போது, ஷஹீது மர்ஹூம் உறவுகளைப் பேணுவதிலும், ஏழைகளுக்கு உதவி செய்வதிலும், விருந்தோம்பல், நோயாளிகளை

விசாரிப்பதிலும் மிகவும் ஆர்வம் உள்ளவர். சிந்து பகுதியில் **ஷஹீது** இருந்த காலத்தில் பல்வேறு ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தார். ஏழைக் குழந்தைகளின் கல்விச் செலவுகளை ஏற்றுக் கொள்வார். விருந்தோம்பல் பண்பு அவரிடம் மிக அதிகமாக நிறைந்திருந்தது. வீட்டிற்கு யாராவது வந்தால் சாப்பாடு கொடுக்காமல் அவர்களை அனுப்பமாட்டார். முறையாக தஹஜ்ஜுத் தொழுவராக இருந்தார்.

அடுத்த **ஷஹீது முகர்ரம் டாக்டர் தாரிக் பஷீர் சாஹிப்.** இவர் சவுத்ரி யூசுப் கான் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீதின்** தந்தை சக்கர்கட் பகுதியைச் சேர்ந்தவர். தந்தையார் பைஅத் செய்து ஜமாஅத்தில் சேர்ந்திருந்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க நிலபுலண்களை பார்ப்பதற்கு சிந்து என்ற இடத்திற்கு சென்று விட்டார். கராச்சியில் தங்கியிருந்தார். **ஷஹீது** மர்ஹூம் அங்குதான் பிறந்தார். பிறகு குடும்பம் சக்கர்கட் வந்தது. ஆரம்ப கல்விக்குப் பிறகு **ஷஹீது** மர்ஹூம் லாஹூர் வந்தார். அங்கு M.B.B.S.உடன் மெடிக்கலின் மற்ற படிப்புகளையும் கற்றார். 15 வருடங்கள் அரசு மருத்துவமனையில் பணியாற்றினார். **ஷஹாதத்தின்** போது லாஹூர் அரசு மருத்துவமனையில் AMS ஆக பணியாற்றினார். தனிப்பட்ட முறையில் கிளினிக்கும் வைத்திருந்தார். **ஷஹாதத்தின்** போது இவரது வயது 57. தாருஸ் ஸிக்ரில் **ஷஹாதத்தின்** பானத்தை அருந்தினார். மஸ்ஜித் மெயின் ஹாலில் மெஹ்ராபுக்கு இடது புறம் அமர்ந்திருந்தார். வெளித்தாக்குதலுக்குப் பிறகு முதலாவது தாக்குதலாக உள்ளே குண்டு வீசியதில் காயமுற்றார். **ஷஹீது** மர்ஹூமின் மனைவி சில மாதங்களுக்கு முன் கனவில், வானத்தில் ஓர் அழகிய வீடு உள்ளது. அது ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. மக்கள் அங்குமிங்கும் நடமாடுகின்றனர் என்று கண்டார்.

இன்னொரு கனவில் பூகம்பம் மற்றும் புயல் வருகிறது. மக்கள் சிதறி ஓடுகின்றனர். நானும் ஓடி அங்குமிங்கும் அலைகிறேன். எனக்கு இவர் எங்கும் தென்படவில்லை.

இவரது வீட்டினர் கூறுகின்றனர்: நல்ல அன்புமிக்க மனிதராக இருந்தார். கடுமையான வார்த்தைகளைக் கூறமாட்டார். குழந்தைகளிடம் நல்ல அன்பு கொண்டவர். உறவுகளைப் பேணக்கூடியவர்; அனுதாபம் உள்ளவர். ஜமாஅத் அல்லாத இவரது வீட்டு உரிமையாளர் இவரது **ஷஹீதான** செய்தி கேட்டு துக்கத்தால் தலைசுற்றி கீழே விழுந்து விட்டார். பல நல்லியல்பு கொண்ட மக்கள் இவ்வாறு இருக்கின்றனர். ஆறு வருடங்களாக வீட்டு உரிமையாளரின் வீட்டிற்கே போய் வாடகையை கொடுத்து விடுவார். வீட்டு உரிமையாளர் வாடகை வாங்க இவரது வீட்டிற்கு வரும் வாய்ப்பே ஏற்பட்டதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களை ஆர்வமாகப் படிப்பார். சந்தாவை முறைப்படி கொடுத்து விடுவார். தினசரி வருமானத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்காக எடுத்து வைக்க வேண்டும் என்று மனைவியிடம் கூறி வைத்திருந்தார். எனது குத்பாக்களை தொடர்ந்து ஒழுங்காகக் கேட்டு வந்தார். சில வேளையில் மீண்டும் மீண்டும் கேட்பார். இவரது ஒரு மகனும் M.B.B.S முடித்து விட்டார். அவர் House Job செய்து கொண்டிருக்கிறார். அவரும் சம்பவத்தில் காயமுற்றுள்ளார். அல்லாஹ் இந்த காயமுற்ற மகனுக்கும் காயமுற்ற அனைவருக்கும் பூரண, விரைவான குணமளிப்பானாக.

அடுத்து **அர்ஷத் முஹம்மது பட் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் மஹ்மூத் அஹ்மத் பட் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீதின்** கொள்ளுத்தாத்தா அப்துல்லா பட் சாஹிப் முதலில் பைஅத் செய்தவர். சியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தாய்வழி கொள்ளுப் பாட்டனார் டஸ்கா பகுதியைச் சேர்ந்த ஜான் முஹம்மது (ரலி) ஆவார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியாவார். **ஷஹீது** மர்ஹூமின் தந்தை Air Force -ல் பணியாற்றி வந்தார். பணிக்காலத்தில் பல இடங்களில் வசித்துள்ளார். **ஷஹீது** மர்ஹூம் லாஹூரில் பிறந்தார். I.Com. படித்திருந்தார். **ஷஹாதத்தின்** போது வயது 48. தமது ஹல்காவின் நாயிப் ஸயீம் அன்சாருல்லாஹ்வாகவும், தஹ்ரீகே ஜதீத் செயலராகவும் பணியாற்றினார். மஸ்ஜித் பைத்துந்நூரில் **ஷஹாதத்தின்** பானத்தை அருந்தினார். ஜுமுஆவுக்காக மிக விரைவில் தயாராகி விடுவார். பொதுவாக ஜுமுஆ நாளில் இவரது சகோதரர் இவரையும் தொழுகைக்கு அழைத்துக் கொண்டு செல்வார். ஏனெனில் போலியோ -வால் இவரது கால் ஊனமுற்றிருந்தது.

ஜுமுஆ நாளில் சீக்கிரமாகவே தயாராகி விடுவார். சகோதரர் வருவதற்கு தாமதமாகி விட்டால் தானே வேனில் போய் விடுவார். சம்பவ நாளில் முதல் ஸஃப்பில் அமர்ந்திருந்தார். ஆரம்ப தாக்குதலிலேயே 3-4 குண்டுகள் பாய்ந்து விட்டன. இதனால் வீட்டினர் கூறுகின்றனர்: ஐவேளை தொழுகையில் பேணுதல் உள்ளவர். உரத்த குரலில் குர்ஆன் ஓதுவார். ஊனமுற்ற போதிலும் தனது வேலையை தானே செய்து கொள்வார். கிலாஃபத்துடன் பேரன்பு கொண்டவர். தகுதிக்கு மீறி சந்தாவைக் கொடுப்பார். ஜமாஅத் புத்தகங்களை நிறைய படிப்பார். துஆ செய்யும் பழக்கம் உள்ளவர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

அடுத்து **முஹம்மத் ஹுஸைன் மல்லி சாஹிப் ஷஹீது.** இவர் முஹம்மத் இப்ராஹீம் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது சியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தவர். லாஹுரில் 34 வருடங்களாக இருந்தார். ஜமாஅத் பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பும் கிடைத்தது. ஷஹாதத்தின் போது இவரது வயது 68. மஸ்ஜித் பைத்துந்நூர் மார்டன் டவுனில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். லாஹுரில் நல்லடக்கம் செய்யப்பட்டார். சம்பவ தினத்தன்று ஒரு மணிக்கு சைக்கிளில் தொழுகைக்காக வந்தார். மெயின் ஹாலில் முதல் ஸஃப்பில் அமர்ந்தார். தீவிரவாதிகளின் துப்பாக்கி சூட்டால் கையிலும் வயிற்றிலும் குண்டு பட்டது; படுகாயமுற்றார். படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். Operation Theatre -ல் ஷஹீதாகி விட்டார்.

வீட்டில் உள்ளோர் கூறுகின்றனர்: ஐவேளை தொழுகையில் பேணுதல் உடையவரும், தஹஜ்ஜுத் தொழுபவருமாக இருந்தார். ஜமாஅத் பணிகளில் பங்கெடுப்பவராக இருந்தார். எலக்ட்ரீசியன் தொழில் செய்து வந்தார். தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்வார். தமது பகுதியில் தமது கண்காணிப்பில் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

அடுத்து **மிர்ஸா முஹம்மத் அமீன் சாஹிப் ஷஹீது.** இவர் ஹாஜா அப்துல் கரீம் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹுமின் தந்தை ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர். 1952-ல் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் சேர்ந்தார். தந்தையார் பைஅத் செய்த சில காலத்திற்குப் பிறகு ஷஹீது மர்ஹும் பைஅத் செய்து விட்டார். ஷஹாதத்தின் போது இவரது வயது 70. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். பொதுவாக தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆ தொழுவார். முதல் ஸஃப்பில் அமர்ந்திருந்தார். கிரானைட் தாக்குதலில் காயமுற்று மூன்று நாள்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 31 மே 2010 -ல் அங்கேயே ஷஹீதாகி விட்டார்.

இரு நாள்களுக்கு முன்பு இரவில் தூக்கத்தில் இருந்து விழித்து திடீரென்று கைகளையும் உயர்த்தி அல்லாஹு அக்பர் என்று கூறி எழுந்து உட்கார்ந்தார். மிகவும் எளிமையானவர்; நல்லியல்பு கொண்டவர்; ஜமாஅத் பணிகளில் தீவிரமாக இருப்பார். பல போட்டிகளில் பங்கெடுத்து பரிசுகளை வென்றவர்.

அடுத்து **மலக் சுபைர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் மலக் அப்துர் ரஷீது சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹும் பைசலாபாத் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தைவழிப் பாட்டனார் மலக் அப்துல் மஜீத்கான் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் பைஅத் செய்திருந்தார்; ஆனால் ஹஸ்ரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நேரடியாக காணவில்லை. ஷஹீது மர்ஹும் வாப்டாவில் பணியாற்றினார். பணி ஓய்வுக்குப் பிறகு சம்பவத்திற்கு ஒரு மாதம் முன்பு லாஹுருக்கு குடி வந்திருந்தார். பைசலாபாத் பைத்துல் ஃபஸ்ல் பள்ளிவாசல் கட்டுமானத்தில் இவரது தந்தை ஆரம்பகட்ட அமைப்பாளர்களுள் ஒருவர். ஆரம்ப காலத்தில் மற்ற ஹல்காவில் ஜுமுஆ தொழுது வந்தார். மஸ்ஜித் நூர் மார்டன் டவுணை பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். அப்பள்ளியில் கணிசமான அஹ்மதிகள் ஒன்றுதிரள்வதை கண்ணுற்று மகனிடம், தம்மை அங்கேயே ஜுமுஆவுக்கு அழைத்து வருமாறு கூறினார். ஷஹாதத்தின் இவரது வயது 61. மஸ்ஜித் பைத்துந்நூரில் இவர்களின் ஷஹாதத் நிகழ்ந்தது. ஷஹீது மர்ஹும் மெயின் ஹாலில் அமர்ந்திருந்தார். இவரது மகன் இன்னொரு அறையில் இருந்தார். துப்பாக்கி சூட்டின் போது ஹாலுக்கு நடுவிலுள்ள கிரில் பகுதிக்கு சென்று இருந்தார். அவரது மகன் அவரைத் தேடினார். மகனது பார்வையில் இவர் படவில்லை. ஆனால் இவர் மகனைப் பார்த்து விட்டார். எங்கே ஓடுகிறாய்? ஏதாவது நடந்தால் நாம் இங்கேயே நமது ஜமாஅத் சகோதரர்களுடன் ஷஹீது ஆவோம் என்று உரத்த குரலில் கூறினார். பிறகு இவரது

இதயத்தில் குண்டு பாய்ந்தது. கடும் காயமுற்றவராக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கேயே ஷஹீதாகி விட்டார்.

வீட்டினர் கூறுகின்றனர்: ஐவேளை தொழுகை, தஹஜ்ஜுத் தொழுகை ஆகியவற்றில் பேணுதல் உள்ளவர். எப்போதும் பெரும்பாலான நேரங்களில் M.T.A. பார்ப்பார். களைப்பினால் இரவில் விழிக்காவிட்டாலும் என்னை பலவந்தமாக யாரோ தஹஜ்ஜுத் தொழுவதற்காக எழுப்பியதைப் போன்று உணர்வதாக கூறியுள்ளார்.

மகன் கார் வாங்கினார். அப்போது ஷஹீது சாஹிப் கூறினார். காரில் ரேடியா, D.V.D.போன்ற எதுவும் பொருத்தக் கூடாது. அதற்குப் பதில் சுப்ஹானல்லாஹ், தரூது ஷரீஃப் ஓதிக்கொண்டு செல் என்று கூறினார். தானும் அவ்வாறே செய்து வருவார்.

இளைய மகன் கூறுகிறார்: வீட்டில் வழிப்பாதை அமைக்கும் போது இந்த இடத்தில் இந்தந்த தரூது ஓது. இதில் இன்ன துஆ ஓது என்று கூறி வருவார். மகன் கூறுகிறார்: காருக்கு இன்சூரன்ஸ் செய்ய வேண்டும் என்று நான் அவரிடம் கூறிய போது, கண்டிப்பாக செய். ஆனால் இன்சூரன்ஸில் உள்ளவர்கள் பலவீனமானவர்கள். நீ வண்டியின் பெயரால் ஒவ்வொருமாதமும் சந்தா கொடுத்து விடு. அல்லாஹ்வே சிறந்த பாதுகாப்பவன் என்று கூறினார். அதேபோன்று செய்யப்பட்டது. ஷஹீது பாக்ஸிங் வீரர். அதிக பரிசுகளைப் பெற்றுள்ளார்.

அடுத்து **சவுத்ரி முஹம்மத் நவாஸ் சாஹிப் ஷஹீது.** இவர் குலாம் ரஸூல் ஜஜ்ஜா சாஹிபுடைய மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் பூர்வீக குடும்பம் சியால்கோட்டில் இருந்தது. ஷஹீதின் தந்தையின் சகோதரியின் கணவர் சவுத்ரி குலாம் அஹ்மத் மஹார் சாஹிப் (ரலி) மற்றும் அவரது தந்தை ஷாஹ் முஹம்மது மஹார் சாஹிப் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாக இருந்தார்கள். ஷஹீதின் தந்தை மற்றும் அண்ணன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலத்தில் பைஅத் செய்தார். அதற்கு முன் அவர்களது கிராமத்தில் ஜமாஅத்தின் விவாத அரங்கு நடந்தது. அதனைக் கேட்டு அவரது குடும்பம் பைஅத் செய்தது. B.A., B.Ed. படித்து விட்டு கல்வித் துறையில் பணியாற்றினார். 1991 லிருந்து காஷ்மீரின் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றார். அக்டோபர் 1992 -ல் லாஹூருக்கு குடிபெயர்ந்தார். தமது ஹல்காவில் கணக்கர் ஆக சேவை செய்யும் வாய்ப்பினை பெற்றார். ஷஹாதத்தின் போது வரது வயது 80. தாருஸ் ஸிக்ர் பள்ளிவாயிலில் ஷஹீதானார். ''லாஹூரில் நான் படித்தேன். தாருஸ் ஸிக்ர் பள்ளிவாசல் கட்டும் பேது நான் வகாரே அமல் செய்துள்ளேன். எனவே தாருஸ் ஸிக்ருடன் எனக்கு ஒரு தொடர்பு இருந்தது'' என்று எப்போதும் கூறுவார். சம்பவத்தன்று புதிய ஆடை, புதிய காலணி அணிந்தவாறு சுமார் 1.00 மணிக்கு தாருஸ் ஸிக்ர் அடைந்தார். நாற்காலியில் அமர்ந்திருந்தார். கிரானைட் வெடித்ததில் ஷஹீதானார். சில மாதத்திற்கு முன்பு மனைவி கனவில் ஓர் சப்தம் வந்தது. வாழ்த்துக்கள். உங்கள் கணவர் உயிரோடுள்ளார் என்று வந்தது.

வீட்டினர் கூறுகின்றனர்: நேர்மையாக பேசுபவர். நல்ல செயல்படக்கூடியவராகவும் ஆரோக்கியமாகவும் இருப்பார். தோற்றத்தால் இவர் 20 வயது குறைவாகத் தெரிவார். தஃலிமுல் இஸ்லாம் கல்லூரியில் ரோயிங் டீமின் கேப்டனாக இருந்தார். பல்வேறு மொழிகளில் ஆர்வம் உள்ளவர். ஜமாஅத் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பார்.

அடுத்து **சேக் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் சேக் ஹமீத் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் குடும்பம் காதியானில் வாழ்ந்தது. நாடு பிரிவினைக்குப் பிறகு ரப்வா வந்தனர். பிறகு ரப்வாவிலிருந்து லாஹூர் வந்து 35 வருடங்களாக அங்கு வாழ்ந்து வந்தார். இவரது தாதா சேக் அப்துர் ரஹ்மான் சாஹிப் இரண்டாவது கிலாஃபத்தின் காலத்தில் பைஅத் செய்தார். ஹஸ்ரத் நஹ்ர் பீபி சாஹிபா (ரலி) என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியா அவர்கள் ஷஹீதின் தாய்வழிப் பாட்டியாவார். ஷஹாதத்தின் போது இவரது வயது 47. மஸ்ஜித் பைத்துந்நூர் மாடல் டவுணில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். பைத்துந்நூர் பின்பக்க ஹாலில் மூன்றாது வரிசையில் அமர்ந்திருந்தார். தீவிரவாதிகள் வரும் போது வாசலை அடைக்க முயன்றார். அப்போது ஒரு குண்டு வயிற்றில்

பாய்ந்து வலது புறம் துளைத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டது. பிறகு கிரானைட் வெடித்ததில் மேலும் படுகாயமுற்றார். நீண்ட நேரம் இரத்தம் வழிந்துகொண்டே இருந்தது. வயிற்றில் கையை வைத்துக் கொண்டு 2-3 மணி நேரம் உயிருடன் இருந்துள்ளார். நடந்து ஆம்புலன்ஸ் வரை போயிருக்கிறார். மருத்துவமனை போகும் வழியில் ஷஹீதாகி விட்டார்.

சம்பவ நாளில் ஜுமுஆவுக்குச் செல்வது சிரமம் என்ற நிலையில்தான் இருந்தார். ஆனால் அல்லாஹ் ஷஹாதத் பதவியைத் தர விருந்தான். எனவே மஸ்ஜித் பைத்துந் நூர் வந்து சேர்ந்தார். ஷஹீது மர்ஹூம் ஒவ்வொரு ஜுமுஆவுக்கும் நோயுற்ற தனது மாமனாரை அழைத்துச் சென்று வந்தார். இம்முறை அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் ஜுமுஆவுக்கு வரவில்லை என்று கூறிவிட்டதால் இவர் தனியாக ஜுமுஆவுக்குப் புறப்பட்டார். வழியில் வண்டி பழுதாகி விட்டது. வண்டியை Workshop -ல் விட்டு விட்டார். பிறகு தமது வேலை செய்யும் இடத்திற்கு சென்று மீதியிருந்த சில வேலையை முடித்தார். Current போய் விட்டது. வெளியில் வந்த போது ஒரு சகோதரரை சந்தித்தார். ஜுமுஆவுக்குப் போக வேண்டும் என்று சொன்னார். பேசிக் கொண்டிருக்கும் போது Current வந்து விட்டது. ஆனால் சிலர் ஜுமுஆவுக்கு புறப்பட்டு விட்டார். கரண்ட் வந்ததால் வேலையைத் தொடங்கவில்லை. மாறாக ஜுமுஆவுக்கு சென்று விட்டார்.

இவரது மனைவி கூறுகிறார்: முன்மாதிரியான கணவர். எனது கணவருடன் எனக்கு திருமணமாகி 20 வருடங்கள் ஆகிறது. கூட்டுக் குடும்பம். எனது கணவர் ஒவ்வொருவரையும் நன்கு கவனித்துக் கொள்வார். எவரும் குறைபட்டுக் கொள்ள வாய்ப்புக் கொடுத்ததில்லை. இவரது சகோதரி ஷஹாதத்திற்கு முன் கனவில் கண்டார். முபஷ்ஷிர் சாஹிப் வானத்தில் பறந்து கொண்டிருக்கின்ற வெள்ளை நிற வண்டியில் இருக்கின்றார். இவரது ஷஹாதத்திற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு இவரது மகள் மரியா முபஷ்ஷிரா கனவில் கண்டார். தந்தை வாசலில் நிற்கிறார். புன்முறுவலுடன் நிற்கிறார். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்களா அப்பா? என்று கேட்ட போது நான் நன்றாக இருக்கிறேன் என்று கூறுகிறார்.

ஷஹீது மர்ஹூம் மென்மையானவர். நல்லியல்பு கொண்டவர். ஏழைகளுடன் அனுதாபம் காட்டுபவர். சிறியவர் பெரியவர்கள் எல்லாரையும் மதிப்பவர்; கண்ணியத்திற்குரியவர்.

அல்லாஹ் இந்த எல்லா ஷஹீதுகளின் சந்ததிகளின் தகுதியை உயர்த்துவானாக! இவர்களது மனைவி மக்களுக்கு பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக! இவரது பெற்றோர் உயிருடன் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த அதிர்ச்சியைத் தாங்கும் ஆற்றலை வழங்குவானாக. இவர்களது சந்ததிகளுக்கு ஈமானை உறுதியாக்குவானாக! பொறுமையுடனும் நிலைத்து நிற்றலுடனும் இவர்களது சந்ததிகள் மார்ககத்தில்நிலைநிற்கவும் செய்வானாக! எல்லாரையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT MANHAEM, GENMANY**

**ON 25.06.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**